உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சோபகிருது வருடம் புரட்டாசி திங்கள் செப்டம்பர் 2023 | பூமி–07



## விரதம் உணவோடு சம்பந்தப்பட்டதில்லை! விரதம் உள்ளத்தோடு சம்பந்தப்பட்டது!



இன்றைய எமது சமூகத்தில் சமய அறிவு போதாமல் இருக்கின்றது. எத்தனையோ அறநெறிப் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்ட போதிலும் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்புவதில்லை. எங்களுடைய தேவஸ்தானத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை தேசிய ரீதியில் சிறந்த அறநெறிப் பாடசாலை எனும் விருது பெற்றது. இங்கு பயிலும் பல மாணவர்கள் பல தேசிய ரீதியில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள்.

தொடர்ச்சி 02ம் பக்கம்

இந்த அறநெறிப் பாடசாலையில் உங்களது பிள்ளைகளை கொண்டு வந்து சேருங்கள் என கேட்டால் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் சமய அறிவைப் பெற்றுக் கொள்ள ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை. இதனால்த்தான் இன்றைய எமது சமூகம் மிகவும் ஆபத்தானதாக மாறி உள்ளது. போதைவஸ்தும் வாள்வெட்டு கலாசாரமும் யாழ்ப்பாணத்தில் மிகவும் மலிந்து கொண்டிருப்பதற்கு காரணம் சமய அறிவு பற்றிய ஆர்வமும் தர்மம் பற்றிய எண்ணமும் மனதில் வளராமல் இருப்பதே ஆகும்.

இந்த நிலையில்த்தான் இந்த உற்சவ காலத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அழைத்து வந்து இறைவியை வழிபட செய்து ஆலயத்தில் தொண்டு செய்ய வைத்து அவர்களை நல்ல வழியில் வளர்க்க வேண்டும். இல்லை என்றால் எங்களுடைய எதிர்கால தலைமுறை பற்றிய ஒரு கேள்விக்குறி இருந்து கொண்டே இருக்கும்.

எனவே இந்த உற்சவ காலத்தில் சைவ மக்கள் நிறைய விடையங்களை கற்றுக் கொள்ள வேண்டும். நம் முன்னோர்கள் உற்சவ காலத்தில் விரத அனுட்டானங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் ஆனால் இன்று பலபேர் விரதம் என்றால் காலையில் உணவு உண்ணாமல் மதியம் ஒரு பிடி பிடிப்பதுதான் விரதம் என நினைக்கின்றார்கள். இதுவல்ல விரதம் என்பது. விரதம் என்றால் மனதைச் சுருக்கி உடலைச் சுருக்கி உள்ளத்தை இறைவன் மீது விரியச் செய்து எண்ணங்களை எல்லாம் தூய்மைப் படுத்துவதுதான் விரதம் ஆகும்.

விரதங்களிலே நித்திய விரதம் நைமித்திய விரதம் என இரண்டு விரதங்கள் உள்ளன. நித்திய விரதம் என்பது சத்தியமாக வாழ்தலைக் குறிக்கும். தாய், தந்தை கணவன், மனைவி, பிள்ளைகள் என ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளை சரிவர நிறைவேற்றுவதை நித்திய விரதம் குறிக்கின்றது. ஒரு பிள்ளை தனது பெற்றோருக்குரிய கடமைகளை சரிவர உணர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஒரு மனைவி தனக்குரிய கடமைகளை சரிவர உணர்ந்து நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளை சரிவர உணர்ந்து நிறைவேற்ற வேண்டும் என இந்த நித்திய விரதம் தெளிவாக சொல்கின்றது.

ஆனால் தற்காலத்தில் இந்த நித்திய விரதத்தைப் பற்றி பலருக்கும் தெளிவாக விளங்குவதாக தெரியவில்லை. இன்று பலர் நினைக்கின்றார்கள் உணவைத் தவிர்த்து நைமித்திய விரதத்தைப் பிடித்தால் எல்லா பலன்களும் கிடைத்து விடும் என்று ஆனால் நித்திய விரதத்தை சரியாகப் பிடித்தால்தான் நைமித்திய விரதத்திற்கு பலன் உண்டு.

**ஆசிரியர்**
கலாநிதி.செஞ்சொற்செல்வர். ஆறு.திருமுருகன்
**உதவி ஆசிரியர்**
திரு.ச.சந்தோஷன்
**வடிவமைப்பாளர்**
திரு.வ.குணநீதன்

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்."

என்று வள்ளுவர் சொன்னார். மிருகங்களை பலியிடாமல் வேறு எந்த உயிர்களிற்கும் தீமை செய்யாமல் எவன் ஒருவன் வாழ்கின்றானோ அவனுக்கு இந்த நித்திய விரதத்தின் முழுப் பலனும் கிடைக்கும். நாங்கள் உணவிற்காக மிருகங்களை வதம் செய்து உண்போமேயானால் அது துன்பம். இன்று பலபேருக்கு விளங்குவதாக இல்லை. ஆசையாக மிருகங்களை வளர்த்து விட்டு கொண்டு போய் வேள்வியிலே வெட்டுகின்றார்கள். பாவம் அது, வளருகின்ற போது தனது எஜமான் தனக்கு உணவு தருகின்றார் என எஜமான் மீது அளவு கடந்த பாச மழை பொழிகின்றது. ஆனால் அந்த எஜமான் ஒருநாள் அதைப் பிடித்துக் கொண்டு போய் மேள தாளத்துடன் கழுத்தை வெட்டி வீழ்த்துகின்றார். துடித்து துடித்து அந்த மிருகம் இறக்கின்றது. அதனால்தான் இந்த உயிரை இப்படி வதம் செய்தால் என்ன பலன் என்று மகான்கள் எழுதி வைத்துள்ளார்கள். எத்தனை பிறவிகள் எடுத்து இந்தப் பாவத்தை கழுவ வேண்டும் என நம் சமயப் பெரியார்கள் தெளிவாக எழுதி வைத்துள்ளார்கள்.

நாம் என்ன செய்கின்றோம் நித்தியமாக பிடிக்கின்ற விரதத்தை கைவிட்டு நைமித்தியமாக பிடிக்கின்ற இந்த உணவைத் தவிர்க்கும் விரத்தைப் பிடிக்கின்றோம். விரதத்தைப் பற்றி நமது ஆறுமுக நாவலர் பெருமான் கூறும் போது உணவைச் சுருக்கியேனும் விடுத்தேனும் இறை சிந்தனையோடு தங்கள் பொழுதைக் கழித்தலே விரதம் என்கிறார். சில ஞானிகளிடம் விரதம் என்றால் என்ன என கேட்கும் போது அவர்கள் அறுசுவை நீக்குதலே விரதம் என்கிறார்கள். நம்மில் பல பேர் நினைக்கின்றர்கள் விரதம் என்றால் காலையில் உணவு உண்ணாமல் 10 கறியுடன் மதியம் ஒரு பிடி பிடிப்பதென்று. உண்மையில் அறுசுவை நீக்கி உண்ணுதலே விரதம் என மகான்கள் எழுது வைத்துள்ளார்கள். விரதத்திற்கு உபவாசம் என்றும் சொல்கின்றார்கள். இதற்கு என்ன பொருள் என்றால் "வாசம்" என்றால் வகித்தல் என்று பொருள் "உப" என்றால் அருகே என்று பொருள் கடவுளுக்கு அருகே வசித்தல்தான் உபவாசம் என்பதாகும்.

கந்த சஷ்டி போன்ற உபவாசங்களுக்கு நம் முன்னோர்கள் நீண்ட நேரம் போய் ஆலயங்களிலே தங்கி இருப்பார்கள் . உணவைப் பற்றிய எண்ணங்களை தவிர்த்து இறைவன் பற்றிய சிந்தனைனயுடன் இருப்பதே உபவாசம்

என்பதாகும். கந்த சஷ்டி உபவாசத்தின் போது திருச்செந்தூர் முருகன் ஆலயத்திற்கு சென்று பார்த்தால் பல ஆயிரம் பக்தர்கள் நீண்ட நேரமாக ஆலயத்தில் இறை சிந்தனையுடன் இருப்பார்கள். அங்கு இடம்பெறும் சொற்பொழிவுகளை மிக ஆர்வத்துடன் கேட்பார்கள். அடியேன் ஆறு தடவைகள் அங்கு சென்று உரையாற்றியுள்ளேன். சும்மா படுத்து இருப்பார்கள் எழும்பி கேள்வி கேட்பார்கள். இதில் ஆச்சரியம் என்னவென்றால் அவர்கள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாக பணியாற்றுவார்கள். கந்த சஷ்டி உபவாசம் என்றவுடன் அவர்கள் மெய் மறந்து மிக எளிமையாக வந்து இறை சிந்தனையுடன் இருப்பார்கள்.

நம்மில் பலருக்கு உபவாசம் என்றால் என்னவென்று தெரியாது.சிலரிடம் நீங்கள் உபவாசமா எனக் கேட்டால் நாங்கள் ஒரு நேர உணவு அல்லது பாலும் பழமும் என சாப்பாட்டு கதையினைத்தான் முதலில் சொல்லுவார்கள். கடவுளோடு ஒன்றிந்து இருப்பதைப் பற்றி சொல்ல மாட்டார்கள். நான் இன்று உபவாசம் என்றால் தெய்வத்துடன் நீண்ட நேரம் வசிக்கின்றேன் என்று சொல்ல வேண்டும். விரதங்களின் மகிமை பற்றி தனுர் வேதம் மிகவும் சிறப்பாக சொல்கின்றது. எந்தவொரு உயிரும் துன்பப்படும் போது அதற்கு உதவிக் கரம் நீட்டுவதுதான் விரதத்தின் முக்கிய செய்தியாக சொல்லப்படுகின்றது.

எந்த உயிரினங்களும் துன்பப்படக் கூடாது என்ற உயர் சிந்தனையுடன் நித்திய விரதத்தை சரியாக கடைப்பிடிப்பவர்களுக்கே நைமித்திய விரதத்தின் பலனும் கிடைக்கும். நித்திய விரதத்தின் கடமைகளை துறந்து உணவை தவிர்ப்பதால் எந்த பலனும் கிடைக்கப் போவதில்லை. இந்த நித்திய விரதத்திற்கு உள்ள பயனைப் போல வேறு எந்த விரதத்திற்கும் பலன் கிடையாது. இந்த நித்திய விரதங்களில் எங்களை அறியாமல் விட்ட பிழைகளை எல்லாம் மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கேட்பதற்காகத்தான் ஆலய உற்சவ காலத்தில் உணவைச் சுருக்கி ஆலயத்தில் நீண்ட நேரம் இருந்து தெய்வத்தை மண்றாடி, மனத்தினால் வாக்கினால் காயத்தினால் தெய்வ சிந்தனையுடன் தெய்வ காரியங்கள் செய்வதுதான் ஆலய உற்சவ காலங்கள் ஆகும்.

விரத காலத்தில் நாங்கள் அரிசி முதலான உணவுப் பொருட்களை ஆலயத்திற்கு கொண்டு வந்து பிறர் உண்பதை பார்த்து மகிழ்வதுதான் விரதத்தின் உச்சப் பயன் ஆகும். அதனால்த்தான் ஒரு காலத்திலே ஆலயங்கள் சிறியதாகவும் ஆலயங்களில் இருந்த மடங்கள் பெரியதாகவும் இருந்தன. செல்வச் சந்நிதி ஆலயம் மிகச் சிறியது ஆனால் 41 மடங்கள் இருந்தன அதனால்த்தான் அவனை அன்னதானக் கந்தன் என்று அழைக்கின்றார்கள். எனவே விரத்தை தயவு செய்து விளங்கி கொள்ளுங்கள். விரத்திற்கு நாங்கள் சாப்பிடப் போகின்றோம் என்று சொல்வதெல்லாம் அறியாமையின் வெளிப்பாடு. நித்திய விரதத்தின் மகத்துவத்தை உணராமல் உணவைத் தவிர்ப்பதால் என்ன பலன்? தாய் தந்தையரை சாப்பிட்டீர்களா என்று கூட கேட்காமல் உணவைத் தவிர்த்து நைமித்திய விரதம் இருந்து ஒரு பலனும் கிடைக்கப் போவதில்லை.

யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி என்று சொல்வதன் மகத்துவம் என்ன என்பதை தயவு செய்து விளங்கி கொள்ளுங்கள். உணவின்றி அல்லல்படும் உயிர்களுக்கு உணவு கொடுங்கள் அதுவே விரதம் ஆகும்.

நான் விரதத்திற்கு சாப்பிடப் போறன் என்று கூறி விட்டு எல்லா கதவுகளையும் சாத்தி விட்டு பத்து கறியுடன் ஒரு பிடி பிடிப்பது விரதம் இல்லை. உண்ணும் உணவை பிறருக்கு கொடுத்து உண்பதுதான் விரதம் ஆகும். இந்த விரதங்களில் பல விரதங்கள் இருந்தாலும் நாளாந்தம் நாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நமது கடமைகளை சொல்லும் நித்திய விரதமே மிக உயர்ந்தது என்கிறார்கள் நமது மகான்கள். இன்று மதுச் சாலைகளில் கூட்டம் நிரம்பி வழிகின்றது. மது என்றதும் பெரும் கூட்டம் அங்கு கூடுகின்றது அங்கு வருவோர்க்கு இது பாவம் என்று அவர்களுக்கு தெரியவில்லை.

கடவுள் நல்ல உடலைத் தந்துள்ளார் நல்ல சிந்திக்கின்ற ஆற்றலைத் தந்துள்ளார் அதன் மூலம் நித்திய கருமங்களை ஆற்ற வேண்டும் இவற்றை செய்யாமல் கடவுளை வந்து பார்ப்பதால் எந்த பலனும் இல்லை. எனவே அன்பர்களே நாளும் பொழுதும் எங்களை நாங்களே கேள்வி கேட்டு எங்களை நாங்களே உணர்ந்து கொண்டு நித்திய கருமங்களை ஆற்றி சிறப்புடன் வாழ்வோமாக.

கலாநிதி. செஞ்சொற்செல்வர்.
ஆறு. திருமுருகன்
சிவபூமி பத்திரிகை ஆசிரியர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கண்வைத்திய நிபுணர்.Dr.ச.குகதாசன்
அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
02-09-2023 அன்று பக்திபூர்வமாக
அனுஷ்டிக்கப்பட்டது.


குப்பிழான் சிவபூமி ஆச்சிரமத்தில் வெள்ளிதோறும் அறநெறிப் பாடசாலை வகுப்புக்கள் நடைபெற்று வருகிறது. பல சிறுவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுகிறார்கள்.






தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் 2023 ஆண்டுக்கான மஹோற்சவப் பெருவிழா 18.08.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச்சிறப்பாக பன்னிரு தினங்கள் நடைபெற்றது. பல திசைகளிலும் இருந்து அன்னையைத் தேடி வந்த பக்தர்களுக்கு சுவையான விசேட அன்னதானம் தவறாது வழங்கப்பட்டது. தெல்லிப்பளையே விழாக்கோலம் பூண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.




## ஆடி அமாவாசையில் மோட்ச தீபம்

கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடத்தில் ஆடி அமாவாசை விரத தினத்தன்று மோட்ச தீபம் ஏற்றப்பட்டு பிரார்த்தனை இடம்பெற்றது. அத்துடன் கீரிமலையில் ஆடி அமாவாசை நாளில் பிதிர்க்கடன் செய்ய வந்த அடியார்களுக்கும், மாவைக் கந்தப்பெருமானின் தீர்த்தோற்சவம் காணவந்த பக்தர்களுக்கும் விசேட அன்னதானம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது.

# நல்லைக் கந்தன் நூல் வெளியீடு

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரால் நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலரின் 31 ஆவது இதழ் வெளியீட்டு விழாவும், யாழ்.விருது வழங்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை(25.08.2023) காலை-09 மணியளவில் யாழ்.மாநகர சபையின் ஆணையாளரும், சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகவும், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.சுதர்சன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

ஓய்வுநிலை ஆசிரியர் ச.மார்க்கண்டு வெளியீட்டுரை ஆற்றி நல்லைக்குமரன் மலர்-31 இனை வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியைத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் சார்பாக இ.இராதாகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் சைவத்திற்கும், தமிழுக்கும். சமூகத்திற்கும் தொண்டாற்றியவர்களைக் கௌரவித்து வருடா வருடம் யாழ்.மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவால் வழங்கப்படும் அதி உயர் விருதான யாழ்விருதை இவ் வருடம் இலங்கையின் தலைசிறந்த மூத்த சிவாச்சாரியார்களில் ஒருவரும், இணுவில் தர்ம சாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ. தாணுநாதக் குருக்கள் மகாதேவக் குருக்கள் நேரடியாகக் கலந்து கொண்டு பெற்றுக் கொண்டார்.













அன்னதானக் கந்தன் என போற்றப்படும் தொண்டமனாற்றங்கரையில் அமர்ந்து அருள் மழை பொழியும் செல்வச்சந்நிதி முருகப்பெருமானின் மகோற்சவம் 16.08.2023 கொடியேற்றத்தோடு ஆரம்பமாகி 31.08.2023 மௌனத் திருவிழாவோடு நிறைவு பெற்றது. பெருந்திரளான பக்தர்கள் கூட்டம் கூட்டமாக வந்து வேலவனை வணங்கினார்கள்.





# மாணவர்களுக்கான வாழ்வியல் பயிற்சிப்பட்டறை

விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வர் எனும் செயற்திட்டத்தின் கீழ் அபயம், சிவபூமி, துமி அமைப்புகள் ஒன்றிணைந்து பாடசாலை தோறும் நடாத்திய கருத்தரங்குகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையின் முதல் நாள் நிகழ்வுகள் யா/.இராமநாதன் கல்லூரியில் 12.08.2023 அன்று நடைபெற்றன.



நேர் சிந்தனைகள் எவ்வாறு எங்கள் வாழ்வை முன்னேற்றும் என்பது தொடர்பாகவும், பாடசாலைப் பருவத்தில் கல்வி அதிலும் குறிப்பாக ஆங்கிலக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பது தொடர்பாகவும், சமூகவலைத்தளங்களுக்குள் அடிமையாகாது எவ்வாறு வினைத்திறனாக அவற்றை பயன்படுத்துவது என்பது தொடர்பாகவும், நாளாந்த கருமங்களை திட்டமிட்டு செய்யவேண்டியதன் அவசியத்தையும், எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ள மனக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தையும் எல்லோருக்கும் பொதுவான இறைவனை முன்னிறுத்தி ஆன்மீகச் சுடர். ரிஷி தொண்டுநாத சுவாமிகள் வழங்கியிருந்தார்கள். மிகவும் சுவாரசியமாக நடந்த இந்த கலந்துரையாடலில் மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கும் சுவாமி பதில்களை வழங்கியிருந்தார்.



கட்டிளமைப்பருவத்தில் ஏற்படும் பாலியல் ரீதியான சவால்கள் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதற்கான சவால்களை மாணவர்கள் கையாளுதல் எனும் தொனிப்பொருளில் வைத்தியர் ரஜீவ் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

எமது மண்ணில் போதைப்பொருட் பாவனையின் இன்றைய நிலவரங்கள் பற்றியும், எவ்வாறு ஒருவன் தன்னை போதைப் பொருளுக்குள் இழக்கிறான் என்பது பற்றியும், போதைப்பொருள் சம்பந்தமாக சமூகத்தில் நிலவும் மௌனம் கலைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், போதைப்பொருள் பாவனையிலிருந்து மாணவர்கள் விலத்தியிருப்பதற்கான வழிவகைகள் பற்றியும், அவற்றில் பெற்றவர்கள் உள்ளிட்ட சமூகத்தின் வகிபாகத்தைப் பற்றியும் வைத்தியர். சிவகணேசன் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார். சின்னப் பிரச்சினைகளுக்காக போதைப் பொருள் எனும் பெரிய பிரச்சனைக்குள் தாம் சென்றுவிடக்கூடாது என்பது தொடர்பான நல்ல வழிகாட்டலை அவருடனான கலந்துரையாடல் மூலம் தாம் பெற்றுக் கொண்டதாக மாணவர்கள் கூறினார்கள்.

இந்த நிகழ்வுகளின் சிறப்பம்சமாக பங்குபற்றிய மாணவர்கள் முழுமையாக தங்களை இந்த நிகழ்வுகளில் ஈடுபடுத்தியிருந்தார்கள். விடயங்களை முழுமையாக உள்வாங்கி இருந்தார்கள். ஒவ்வொரு வளவாளரின் கலந்துரையாடலின் நிறைவிலும் வெவ்வேறு பாடசாலை மாணவர்கள் யாவரும் ஒற்றுமையாக தாமாக எழுந்து, கரகோசத்தோடு வளவாளர்கள் தங்களுக்கு வழங்கிய பயிற்சிக்கு நன்றி கூறியமை அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. ஒவ்வொரு பாடசாலையிலும் நடைபெற்ற எமது விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் கருத்தரங்குளின் போது தாமாக எம்முடன் இணைந்து பணியாற்ற முன்வந்த மாணவர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதை நிறுவுவது போல் இவர்கள் செயற்பாடுகளும் இடம்பெற்றன. இங்கு பெற்ற வாழ்வியல் பயிற்சிகளை தங்கள் பாடசாலையிலும் தாங்கள் வாழும் சமூகத்திலும் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதில் இவர்கள் உறுதியாக இருப்பதை உணர முடிந்தது.



மீண்டும் மறுநாள் இறுதிநாள் பயிற்சிப்பட்டறைக்கு சகல மாணவர்களும் உரிய நேரத்திற்கு சமூகமளித்திருந்தமை அவர்களின் ஆர்வத்தை காட்டுவதாக இருந்தது.

மாணவர்களுடன் மிக உற்சாகமாக தனி நடிப்பு மூலமும், குழுச் செயற்பாடுகள் ஊடாகவும், வினாக் கொத்துப் படிவங்களை வழங்கியும் மதுபானங்களை எங்கள் வாழ்வில் தவிர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தை யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீட விரிவுரையாளர் திருமதி. ர. மைதிலி வழங்கியிருந்தார்.

எந்த ஒரு நிகழ்வுக்கும் ஆயத்தமாகும் போது ஒத்திகை பார்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அதிகரித்து வரும் தற்கொலைகளை தவிர்க்க எவ்வாறு எங்களை மனரீதியாக தயார் செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும், நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்வதற்கான தேவையையும் பற்றி கலாநிதி செஞ்சொற்செல்வர்.ஆறு.திருமுருகன் அவர்கள் மாணவர்களோடு கலந்துரையாடினார். தெரிவு செய்யப்பட்ட இந்த மாணவர்களிடம் இந்த பயிற்சிப் பட்டறை மூலம் பெற்றுக் கொண்ட விடயங்களை பாடசாலையிலும், சமூகத்திலும் கொண்டு சேர்க்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

நாங்கள் எவ்வாறு எங்கள் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம் மற்றும் எங்கள் நேரத்தை எவ்வாறு வினைத்திறனாக பயன்படுத்த முடியும் என்பது சமபந்தமாக புவியியல்த்துறை விரிவுரையாளர் திரு.இ.தனுசன் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

மாணவர்களை குழுக்களாக இணைத்து, அவர்களின் சிந்தனையாற்றலை தூண்டும் விதமாக ஒரு கலந்துரையாடலை வைத்தியர் ரஜீவ் அவர்கள் மேற்கொண்டிருந்தார். மாணவர்கள் ஆர்வத்துடன் அவர் வழங்கிய நடைமுறை பிரச்சனையிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிகளை வினைத்திறனாக முன்வைத்திருந்தார்கள்.

இருநாள் பயிற்சிப்பட்டறை தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், இதில் தாங்கள் கற்ற விடயங்களை சமூகத்திடம் கொண்டு சேர்க்க சகல வழிகளிலும் முயற்சிப்பதாக மாணவர்கள் உறுதியெடுத்துக் கொண்டார்கள். அதன் முதற்கட்டமாக பாடசாலை காலை பிரார்த்தனைகளில் இதனைப் பற்றி மற்றய மாணவர்களுடன் கலந்துரையாடுவதாகவும், சமூகத்தின் மௌனம் கலைக்க தாங்கள் முயல்வதாகவும் மாணவர்கள் கூறினார்கள்.

முதல்நாள் நிகழ்வுகளைப் போலவே மதிய போசனத்தோடு இறுதிநாள் நிகழ்வுகளும் அனைவருக்கும் மனநிறைவானதாக நிறைவு பெற்றன. பங்குபற்றிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வுகளுக்கான அனுமதியினை வழங்கிய வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட வட மாகாண கல்வி அமைச்சிற்கும், தமது பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் அனுப்பி வைத்த பாடசாலை அதிபர்களுக்கும், வருகை தந்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக நிகழ்வுகளுக்கான மண்டபம் உட்பட சகல வசதிகளையும் ஏற்படுத்தி தந்த யா:.இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் உள்ளிட்ட பாடசாலை சமூகத்திற்கும், தமது பெறுமதிமிக்க நேரத்தையும் கருத்துக்களையும் மாணவர்களுக்கு வழங்கிச் சென்ற சிறப்புமிக்க வளவாளர்களுக்கும், நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைக்க ஆரம்பம் முதல் கடுமையாக உழைத்த நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.








# இல்லப் பிள்ளைகளை பார்த்தாவது திருந்தி நடவுங்கள்...

தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் உள்ள மகளிர் இல்லத்தில் உள்ள பிள்ளைகள், மிகவும் வயதில் குறைந்த சிறிய பிள்ளைகள் ஆவர். ஆனால் எவருடைய உதவியுமின்றி அதிகாலையிலே நேரத்துடன் எழுந்து தமக்குரிய கடமைகளை தாமே செய்கின்றார்கள்.தமது ஆடைகளை தாமே துவைத்து சுத்தம் செய்கின்றார்கள் அத்துடன் இல்லம் மற்றும் ஆலயத்தில் எண்ணற்ற தொண்டுகளை தினமும் சலிக்காமல் செய்கின்றார்கள்.

ஆனால் இன்று பல வீடுகளிலே 25 வயதை கடந்த பின்பும் கூட பிள்ளைகளின் ஆடைகளை கூட பெற்றோர்களே துவைத்து சுத்தம் செய்யும் அவலம் நடைபெறுகிறது. நமது இல்லத்தில் கல்வி பயில்கின்ற பிள்ளைகளில் பலர் பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி கற்று வருகின்றார்கள் இன்னும் சில மாணவிகள் தமது பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்துள்ளார்கள். அத்துடன் தற்பொழுது பாடசாலை கல்வியை தொடரும் இல்ல மாணவிகள் அனைவரும் சிறந்த மாணவிகளாக கல்வியில் உயர்ந்து நிற்கின்றார்கள். இம் மாணவிகள் அனைவரும் தமக்கு தேவையானவற்றை தாமே செய்து கொள்ளும் பக்குவத்துடனே இல்லத்தில் வளர்கின்றார்கள்.

அதிகாலை, மதியம் மற்றும் மாலை என இம் மாணவிகள் எமது தேவஸ்தானத்திற்கு பெருந் தொண்டு செய்து வருகின்றார்கள் அவர்கள் யாரும் தமக்கு உதவி செய்யுங்கள் என்று பிறரை பார்த்து கேட்பதுமில்லை நம்பி இருப்பதுமில்லை. ஆனால் இன்றைய இளைய சமூகம் அதிகாலையில் நித்திரையை விட்டு எழும்புவதை கூட பெரிய சுமையாக கருதுகின்றார்கள் அத்துடன் அவர்களின் ஆடைகளை கூட அவர்களது பெற்றோரே சுத்தம் செய்யும் அவல நிலை இருப்பது என்பது நல்ல மாற்றத்திற்கான அறிகுறியாக தெரியவில்லை.




இந்த சமூகத்திற்கு ஏதாவது நல்ல கருமம் ஆற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் காலையில் எழுந்து மேசையில் அமர்ந்தவுடன் பலர் என்னை தொடர்பு கொண்டு எங்களது தாய் தந்தையரை உங்களது முதியோர் இல்லத்தில் சேர்க்க இடம் தர முடியுமா? என்றுதான் கேட்கின்றார்கள். உங்களுடன் சேர்ந்து நாங்களும் இந்த சமூகத்திற்கு ஏதாவது நல்ல கருமம் செய்ய வருகின்றோம் என யாரும் கேட்பதில்லை. அதிலும் குறிப்பாக நன்றாக படித்த சமூகம் கூட இன்று தமது பெற்றோரை பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து தவறி நடப்பதுதான் பெரும் வேதனையாக உள்ளது. ஒருவர் என்னிடம் கேட்கின்றார் என்னுடைய மகள் இந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சை எழுத வேண்டியுள்ளதால் எனது குடும்பத்துடன் ஒன்றாக உள்ள எனது அம்மாவை உங்களது முதியோர் இல்லத்தில் சேர்க்க முடியுமா என தனது கடமையினை மறந்து கேட்கின்றார்.

பல்வேறு வாழ்க்கை சுமைகளை சுமந்து தமது பிள்ளைகளின் நல்ல எதிர்காலத்திற்காக சொல்லனா துயர்களை அனுபவித்த பெற்றோர்களை அனாதை இல்லங்களில் சேர்ப்பிக்கும் எண்ணம் ஒரு நல்ல மனிதனின் சிந்தனையில் ஒருபோதும் உதிக்காது. தமது பிள்ளைகள் சிறு பிள்ளைகளாக இருக்கும் போது ஆசையாக அவர்களுக்கு அழகான ஆடை உடுத்தி ஆலயங்களுக்கு அழைத்து வந்து அங்கு உள்ள கடவுளை வணங்க செய்து அன்புடன் அவர்கள் ஆசைப்படும் பொருட்களை வாங்கி கொடுத்து, வீட்டிற்கு அழைத்து சென்ற பெற்றோர்களை வீட்டிலேயே தவிக்க விட்டு விட்டு ஆலயங்களுக்கு வளர்ந்த பிள்ளைகள் வந்து போவதைப் பார்க்க மனம் வேதனைப் படுகின்றது.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று சிறு வயதிலேயே நமக்கு சொல்லி தருவதன் நோக்கம் பிள்ளைகள் தமது பெற்றோர்களின் மகத்துவம் பற்றி அறிய வேண்டும் என்பதற்காகதான். அதனைப் பாடமாக்கி பரீட்சையில் எழுத வேண்டும் என்பற்காகா அல்ல.

எனவே பெற்றோர்களை பாதுகாக்கும் உண்ணத கடமையில் இருந்து எவரும் தவறி விடாமல் அவர்களை நம் கண் கண்ட தெய்வங்களை போல பாதுகாக்க வேண்டும். நாங்கள் முதியோர் இல்லங்களை அமைத்ததன் நோக்கம் ஆதரவற்ற மற்றும் பாதுகாக்க எவருமற்ற முதியவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதற்குதான் ஆனால் சகல வசதிகளுடன் வாழும் இன்றைய பல பிள்ளைகள் முதியோர் இல்லத்தில் இடம் கிடைக்குமா? என கேட்பது, உண்மையில் மன வேதனையாகவே உள்ளது. எனவே ஒவ்வொரு பிள்ளைகளும் தமது பெற்றோர்களை பாதுகாக்கும் தமது உண்ணத கடமையினை சரிவர செய்ய வேண்டும்.


**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்,**




ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாக விளங்கும் மட்டக்களப்பு மண்ணின் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தின் வருடாந்த மகோற்சவம் 19.08.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 04.09.2023 அன்று கொடியிறக்கத்துடன் நிறைவு பெற்றது. விசேட வழிபாடுகளில் பெருமளவு பக்தர்கள் கலந்து சிவப்பரம்பொருளை வழிபட்டார்கள்.










அலங்கார கந்தன் எனப் போற்றப்படும் நல்லூர்க் கந்தசுவாமியாரது வருடாந்த உற்சவம் 21.08.2023 அன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகிறது. தினமும் விதம் விதமான அலங்காரங்களில் அழகன் முருகனைக் காண பக்தர்கள் குவிந்த வண்ணமுள்ளார்கள். பஜனைகளும், கீர்த்தனைகளும், பிரார்த்தனைகளும் என நல்லூர் மண்ணே பக்திப் பிரவாகமெடுத்து காட்சியளிக்கிறது.







## கோணேச்சரத்தில் மேலுமொரு தளத்தில் சிவபூமி யாத்திரீகர் மடம்







திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடம் மூன்றாவது தள மண்டபம் 09.09.2023 திறந்து வைக்கப்பட்டது. வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருகின்ற பக்கத அடியார்களுக்கும், கல்வி நடவடிக்கைகளுக்காக வருகைதரும் மாணவ மாணவிகளுக்கும், அவசர தேவைகள் கருதி வருகைதரும் ஏனைய பொது மக்களின் நலன் கருதியும்

திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் தங்குமிட மடம் திறந்து வைக்கப்படுகிறது.

## துர்க்கையம்மன் ஆலயத்தில் பாலஸ்தாபனம்

வரும் வருடம் கும்பாபிஷேகம் இடம்பெற திருவருள் கைகூடியுள்ள தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவிலில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் 06.09.2023 நடைபெற்றது. ஆலய உள்வீதி பிரகாரம் பெரிதாக்கப்படவுள்ளதுடன், வர்ணப்பூச்சு வேலைகளும் இடம்பெறவுள்ளது. அதோடு அபிராமி அந்தாதி பாடல்கள் நூறும் காப்புச் செய்யுளுடன் கருங்கல்லில் பதிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.











யாழ்ப்பாணம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 21.08.2023 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச்சிறப்பாக நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் கலந்து கொண்டு ரங்கநாதனை வழிபட்டார்கள்.

## தேனி போல் வேலை செய்யுங்கள்

ஒரு யானை தன் உணவுக்காக,ஒரு தோட்டத்தில் நுழைந்தால்,அது அங்கு உண்பதை விட சேதமாவதே அதிகமாக இருக்கும்.அதே சமயம்,தேனீ,தன் உணவுக்காக ஒரு மலரிலிருந்து தேன் எடுப்பது எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறது?அது தேனை எடுக்கும்போது பூவிற்கு எந்த சேதமும்,மாற்றமும் ஏற்படுவதில்லை.ஒரு பூவைப் பார்த்தால்,அதிலிருந்து தேனீ தேன் எடுத்திருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டு பிடிக்கவேமுடியாது.

தன் கீழே உள்ளவர்களிடம் வேலை வாங்கும் நிலையில் உள்ளவர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டிய பாடம் இது.



## தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போனது..!!

ஒரு பெரிய ஆபத்து வந்து அது சிறிய ஆபத்தாக மாறி அதிலிருந்து பிழைத்துக் கொண்டால் மேற்கூறிய பழமொழியை நாம் பயன்படுத்துகிறோம்.

ஆனால் அது ஒரு உண்மை சம்பவத்திலிருந்து பிறந்தது..!! தெரியுமா..??

மஹாபாரதத்தில் போரின் போது அர்ஜுனன் தன்னுடைய வில் திறத்தால் தான் பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்து வருகிறது என்று நினைத்து வந்தான்.

பதினேழாம் நாள் போர் முடியும் தருவாயில் கர்ணன், நாகாஸ்திரத்தை எடுத்து, விஜயத்தில் தொடுத்து, நாணை முழு நீளத்திற்கு இழுத்து எய்ய போகும் தருணம், கர்ணனின் குறியைக் கண்ட சாரதி சல்லியன் கர்ணனிடம், அவன் கழுத்துக்கு குறி வைக்காதே, மார்புக்கு குறி வை என்றான்.

கர்ணன் □அர்ஜுனன் மாபெரும் வீரன், அவன் உயிர் சில நிமிடங்கள் ஆனாலும் துடித்து இறப்பதை நான் விரும்பவில்லை. ஒரே நொடியில் வேதனை இன்றி அவன் இறக்கட்டும். இதோ அவன் கழுத்துக்கு குறி வைத்து எய்கிறேன் அம்பை□ என்றான்.

சல்லியன் மீண்டும் வலியுறுத்தினான் □ சொன்னாள் கேள் கர்ணா, அர்ஜுனனிடம், நாகாஸ்திரத்துக்கு தகுந்த பதில் அஸ்திரம் கிடையாது. எனவே கண்ணன் நிச்சயம் ஏதாவது சூழ்ச்சி செய்வான். எனவே நீ அவன் மார்புக்கு குறி வை□ என்றான்.

கர்ணன் கேட்கவில்லை நாகாஸ்திரம், நெருப்பைக் கக்கிக் கொண்டு அர்ஜுனனை நோக்கிப் பாய, அர்ஜுனன் தன் முடிவு நெருங்கி விட்டது என கையைக் கட்டிக் கொண்டு காத்திருக்க, அண்டசராசரங்கள் நடுநடுங்க, போரை ஆவலாய் காணக் காத்திருந்த தேவர்கள் மனம் பதைபதைக்க, நாகஸ்திரம் அர்ஜுனனை நெருங்கியது.

அந்த நேரத்தில், கண்ணன் தன் காலால் தேரை அழுத்த, அது, ஒன்னரை அடி மண்ணுக்குள் புதைந்தது. அர்ஜுனன் தலையைக் கொய்ய வந்த நாகாஸ்திரம், அர்ஜுனனின் கிரீடத்தை(அர்ஜுனனுக்கு அவன் தந்தை இந்திரனால் வழங்கப்பட்டது) மட்டும் சுக்குநூறாக உடைத்தது.

இத்தோடு அர்ஜுனனின் மமதையும் அழிந்தது.
இதிலிருந்தே இந்தப் பழமொழி வந்தது.

